IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 38/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 2, PW 3 |
| Name | **அசீனா.** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 16th day of July 2025.

16.07.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:—**

நான் தற்சமயம் நிலாக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். பாதிக்கப்பட்ட சிறுமி என்னுடைய மூத்த மகள் ஆவார். எனக்கு மொத்தம் 3 குழந்தைகள். அவர் 11 ஆம் வகுப்பு பாடந்துரையில் உள்ள MTS பள்ளியில் படித்து வந்தார். எனது மகள் பாதிக்கப்பட்ட சிறுமி பகவதிகுமார் என்ற நபருடன் போனில் பேசி வந்தார். அதை நான் கண்டித்தேன். 26.02.2024 ஆம் தேதி வழக்கம் போல் பள்ளிக்கு சென்ற என் மகள் மாலை வீடு திரும்பினர். வழக்கம் போல் வீட்டில் வேலை முடித்து இரவு தூங்க சென்றார். நான் சுமார் இரவு 12.30 மணியளவில் கண்விழித்து பாத்ரூம் செல்வதற்காக சென்ற போது அடுத்த அறையில் தூங்கி

கொண்டிருந்த என் மகளை காணவில்லை என்பது தெரிந்ததும், என் கணவரை எழுப்பி சொன்னேன். நானும், என் கணவரும் அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம், கிடைக்கவில்லை. 26.02.2024 ஆம் தேதி பள்ளிக்கு சென்று வந்த என் மகளிடம் எங்கள் வீட்டில் இருந்த 11,000/- ரூபாயை காணவில்லை என்றும், அதை எடுத்தாயா என்று கேட்டேன். அப்போது அவர் பகவதிகுமார் என்பவரிடம் கடனாக கொடுத்தேன். வாங்கி தருவதாக சொன்னேன். அதன் பின்னர் தான் காணவில்லை. மறுநாள் காலை நிலக்கோட்டை காவல் நிலையம் நானும் என் கணவரும் சென்றோம். எனது கணவர் தான் புகார் கொடுத்தார். பின்னர், 01.03.2024 ஆம் தேதி காணாமல் போன எனது மகளை கண்டுபிடித்துவிட்டதாக நிலக்கோட்டை காவல் நிலையத்தில் சொன்னார்கள். நாங்கள் சென்று பார்த்தேன். நான் விசாரித்தேன். போலிசாரும் எங்கள் முன்னிலையில் விசாரித்தார்கள். அப்போது, என் மகள் பாதிக்கப்பட்ட சிறுமி காணாமல் போன பணத்தை நாங்கள் கேட்டு கண்டித்தாகவும், அதை கேட்டு பகவதி குமாரிடம் சொன்னதாகவும் சொன்னார். அதற்கு அவர் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன். வீட்டில் இருந்து வந்துவிடு என்று சொல்லியும், என் மகளை TN 45 X 1212 என் பைக்கில் ஏற்றி கொண்டு கள்ளி கோட்டையில் உள்ள அவருடைய தங்கை வீட்டிற்கு அழைத்து சென்று சென்றதாகவும், என் மகளை அவருடைய தங்கை வீட்டில் விட்டுவிட்டு கோவைக்கு வேலைக்கு சென்றுவிட்டதாகவும் சொன்னார். அதற்கு முன்பாக ஜனவரி மாதம் அவருடைய வீட்டிற்கு என் மகளை அழைத்து சென்றதாகவும், யாரும் இல்லாத சூழ்நிலையில் வீட்டிற்குள் அழைத்து சென்று என் மகளிடம் ஹராஸ் செய்ததாக சொன்னார். தப்பு செய்ததாக சொன்னார். இது சம்பந்தமாக நிலக்கோட்டை போலிசில் புகார் கொடுத்தோம். அவர்கள்

அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் வினோத் குமார் எதிர் பஞ்சாப் அரசு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பின்படி குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.

Sd/- அசீனா./

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.